**வாக்குமூலம்**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கொடுமுடி**
**அசல் வழக்கு எண் : 78/2016**
**வாதி தரப்பு சாட்சி:2**

| | |
|---|---|
| பெயர்: குமரவேல் (வா.சா.2 ) | நாள்: 07.08.2026 |
| த.பெ: | |

**2026ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 07ம் நாள் வெள்ளிகிழமை** வாதி மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் உத்தரவின்பேரில் S.ராமகிருஷ்ணன் அவர்களால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்பட்டது.

**வா.சா.1 – குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பு):–**

இந்த வழக்கில் சாட்சி சொல்ல வாதி சொன்னதன் பேரில் தான் நான் வந்துள்ளேன் என்றால் சரிதான். வாதி சொத்துக்களின் சர்வே எண் சொல்ல முடியுமா என்றால் முடியாது. வாதி சொத்தை ஒட்டி எனக்கு பூமி உள்ளதா என்றால் இல்லை சற்று தள்ளி உள்ளது. பிரதிவாதி எப்போது கிணறுதோண்டினார் என்றும், எப்போது பைப்லைன் சேதம் அடைந்தது என்று குறிப்பிட்டு என்னால் சொல்ல இயலுமா என்றால் 2016ம் வருடம் கிணறு தோட்டினார், தேதி குறிப்பிட்டு சொல்ல முடியாது. பிரதிவாதி கிணறு தோண்டும் போது நான் பக்கத்தில் இருந்தேனா என்றால் இருந்தேன். அப்போது வாதி உடன் இருந்தாரா என்றால் நிறைய பேர் இருந்தார்கள், வாதி இருந்தாரா என்று தெரியவில்லை. கிணறு தோண்டும் போது கிணறு தோண்டிய இடத்தில் பைப் இருந்ததாக வாதி பிரதிவாதியிடம் கூறவில்லை என்றால் சரியல்ல அவர் பைப் லைன் செல்வதாக பிரதிவாதியிடம் கூறினார்.

2. எத்தனை அடி ஆழத்தில் குழாய் பதிக்கப்ட்டிருந்தது என்றால் 5 அடி ஆழத்தில் குழாய் பதிக்கப்பட்டிருந்தது. மேற்படி குழாய் சிமெண்ட் குழாய் என்றால்

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.08.07 16:33:30 +0530

சரிதான். பிரதிவாதி எத்தனை அடி கிணறு தோண்டினார் என்றால் 10 அடி தோண்டினார். பிரதிவாதி வாதிகளிடம் நிலத்தடி குழாய்க்கு மாற்று பாதை அமைத்து தருவதாக அப்போதே கூறினார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதி மாற்று பாதை அமைத்து தருவதில் ஆட்சேபணை என்று கூறிய விவரம் எனக்கு தெரியும் என்றால் அதுபற்றி சரியாக தெரியாது. தோண்டப்பட்ட கிணற்றின் வழியே சிமெண்ட் குழாய் மறுபடியும் அமைத்து தரமுடியாது என்றால் கிணறு 10 அடி ஆழம் தான் இருப்பதால் அமைத்து தரமுடியும். நான் வாதி கேட்டுக்கொண்டதன் பேரில் நடைமுறைக்கு சாத்தியம் இல்லாதது குறித்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

3. காளிங்கராயன் பாசனம் மேற்படி பூமிகளுக்கு உள்ளது என்றால் சரிதான். வாணி கிணறு மூலம் வாதி பிரதிவாதிகள் மின்மோட்டார் வழியாக தண்ணீர் எடுத்து வருகிறார்கள் என்றால் சரியல்ல, தனித்தனி ஆயில் இன்ஜின் மூலமாக எடுத்துவருகிறார்கள். வாணி கிணற்றில் மின்மோட்டார் எதுவும் உள்ளதா என்றால் வாதி சண்முகத்திற்கு மட்டும் மின்மோட்டார் உள்ளது. மின்மோட்டார் வாதி சண்முகத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை காண்பிப்பதற்கு ஆவணம் ஏதேனும் உள்ளதா என்றால் என்னிடம் இல்லை வாதியிடம் இருக்கலாம். மேற்படி மின்மோட்டார் தொடர்பாக ஒரு வழக்கு நடந்து வரும் விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி வழக்கு பிரதிவாதிக்கு ஆதரவாக தீர்ப்பாகி உள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

4. வாதி பிரதிவாதியின் மீது காவல்நிலையத்தில் புகார் கொடுத்த போது நான் சென்றேனா என்றால் சென்றேன் ஆனால் காவல்நிலையத்திற்குள் செல்லவில்லை.

PANDIARAJAN
Digitally signed by PANDIARAJAN
Date: 2026.08.07 16:33:36 +0530

வாதிக்கு நான் பங்காளி முறை என்றால் சரிதான். வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பற்றி எனக்கு எவ்வாறு தெரியும் என்றால் வாதி சொல்லியதன் பேரில் தெரியும். நான் வாதிக்கு நெருங்கிய உறவினர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதன் பேரில் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி நிலத்தடி குழாய் உடைத்த பிறகு தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, அதற்கு முன்பே தாக்கல் செய்துள்ளார். வாதி எந்த தேதியில் வழக்கு தாக்கல் செய்தார் என்ற விவரம் தெரியுமா என்றால் வருடம் 2016 என்று எனக்கு தெரியும். நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :-இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.08.07 16:33:41 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.